# விக்டோரியாவின் இனவாத எதிர்ப்பு உத்தி 2024-2029

## ஒரு பார்வை

விக்டோரியாவில் **இனவாதம் மற்றும் பாகுபாட்டை நிறுத்துவதற்கான 5 ஆண்டு திட்டமே** விக்டோரியாவின் முதல் முழு- அரசாங்க இனவாத எதிர்ப்பு உத்தி ஆகும்.

ஒன்றாகச் செயல்படுவதன் மூலம், அனைவரும் உள்ளடக்கப்பட்டதாக உணரும் வகையில், நியாயமான பாதுகாப்பான விக்டோரியாவை உருவாக்க முடியும்.

## இனவாதம் என்றால் என்ன?

இனவாதம் என்பது மக்கள் தங்கள் இனம் அல்லது இனக்குழு காரணமாக நியாயமற்ற முறையில் நடத்தப்படும் பாகுபாட்டின் ஒரு வடிவமாகும். இது வாய்மொழி அவமதிப்பு, ஏற்றுக்கொள்ளாமல் தவிர்த்தலை அல்லது மற்றவர்களுக்குச் சமமான அணுகலை அல்லது வாய்ப்புகளை வழங்காமல் இருப்பதை உள்ளடக்கலாம்.

இனவாதம் பல வழிகளில் வெளிப்படலாம். இந்த உத்தி பின்வருவனவற்றில் உள்ள இனவாதத்தை எதிர்கொள்ள முனைகிறது.

- சமூகம்
- அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள்
- சட்டங்கள், கொள்கைகள் மற்றும் அமைப்பு முறைமைகள்.

## எங்கள் கண்ணோட்டம்

அனைத்து விக்டோரியர்களும் சம உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை அனுபவிக்கின்ற, மேலும் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் ஆதரவான சமூகங்களில் செழித்து வளர்கின்ற இனவாதம் மற்றும் பாகுபாடு இல்லாத ஒரு விக்டோரியா.

**விக்டோரியாவில் இனவாதம் மற்றும் பாகுபாட்டைக் குறைப்பதற்கான உத்தி 4 இலக்குகளைக் கொண்டுள்ளது:**

### இலக்கு 1.

**இனவாத மனப்பான்மை, நடத்தைகள் மற்றும் நம்பிக்கைகள் அடையாளம் காணப்படுகின்றன, சவால் விடுக்கப்படுகின்றன மற்றும் நிராகரிக்கப்படுகின்றன.**

### இலக்கு 2.

**அரசாங்கச் சேவைகள் மற்றும் பணியிடங்கள் பாதுகாப்பானவை, அணுகக்கூடியவை மற்றும் பாரபட்சமற்றவை**

### இலக்கு 3.

**அனைத்து துறைகளிலும், பங்கேற்பு, முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் வெற்றிக்கு இனிமேலும் இனவாதம் மற்றும் பாகுபாடு தடையாக இருக்காது**

### இலக்கு 4.

**இனவாதத்திற்கு ஆளானவர்கள் பொருத்தமான மற்றும் கலாச்சார ரீதியாக பாதுகாப்பான சேவைகள் மற்றும் ஆதரவைப் பெறுவது**

## நோக்கத்தை நிறைவேற்றுதல்

இனவாத எதிர்ப்பு உத்தி பின்வருவனவற்றைச் செயல்படுத்தும்:

- **சமூகம்சார் விளையாட்டு** நிகழ்வுகளில் இனவாதத்தை வெற்றிகொள்ள மாநிலம் தழுவிய பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல்
- உள்ளூர் மட்டத்தில் இனவாதத்துக்குச் சவால் விடும் **சமூகத்தால் வழிநடத்தப்படும் நடவடிக்கைக்கு** ஆதரவளித்தல்
- வெறுப்புப் பேச்சு மற்றும் நடத்தைக்கு எதிராக **பாதுகாப்பையும் சட்டங்களையும்** வலுப்படுத்துதல்
- புகார்களை மேற்பார்வையிடும் நிறுவனங்கள் **இனவாதம் தொடர்பான புகார்களுக்கு எதிர்வினையாற்றும்** விதத்தை மேம்படுத்துதல்
- **சட்ட அமலாக்கத்தில்** இனவாதத்தையும் பாகுபாட்டையும் குறைத்தல்
- **வேலை வழங்குநர்களும் நிறுவனங்களும்** இனவாதத்தைத் தடுக்கின்ற மற்றும் பதில்வினையாற்றுகின்ற விதத்தை மேம்படுத்துதல்
- இனவாதத்தை எதிர்கொண்ட மக்களுக்கான **உள்ளூர் இனவாத எதிர்ப்பு ஆதரவு வலையமைப்புகளை** வலுப்படுத்துதல்.

இனைவாதத்தைக் குறைப்பதற்கான உத்தியின் தாக்கத்தை நாங்கள் அளவிடுவோம். எங்கள் முன்னேற்றம் குறித்து சமூகத்திற்குத் தெரிவிப்போம்.

VICTORIA State Government


# நமக்கு ஏன் இந்த உத்தி தேவை

விக்டோரியர்கள் 300 க்கும் மேற்பட்ட

**வெவ்வேறு மரபுவழியைச் சேர்ந்தவர்கள்**

**290 மொழிகளைப்** பேசுகிறார்கள் **மற்றும் பேச்சுவழக்குகளைக் கொண்டுள்ளார்கள்**

கிட்டத்தட்ட **200 வெவ்வேறு நம்பிக்கைகளைப் பின்பற்றுகின்றனர்**



விக்டோரியர்களில் **30%** பேர் வெளிநாட்டில் பிறந்தவர்கள்



ஆஸ்திரேலியாவின் முதல் மக்களில் **8%** பேர் விக்டோரியாவில் வாழ்கின்றனர்

2022 இல், **5 இல் 3 பேர் (60%)** ஆஸ்திரேலியாவில் இனவாதத்தை அனுபவிப்பதாகத் தெரிவித்தார்கள்

2023ஆம் ஆண்டில், **5 இல் 1 நபர் (18%)** ஆஸ்திரேலியாவில் இனவாதத்தை அனுபவிப்பதாகத் தெரிவித்தார்கள்

**5 இல் 3 ஆஸ்திரேலியர்கள் (63%)** ஆசியா, ஆப்பிரிக்கா அல்லது மத்திய கிழக்கு அல்லது கிறித்துவம் தவிர்த்த வேறு மதத்தைச் சேர்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடியேற்றக் குழுக்கள் எதிர்மறையான பார்வையைக் கொண்டுள்ளனர்

**5 ஆஸ்திரேலியர்களில் 3 பேர் (62%)** இனவாதத்தை 'மிகப் பெரிய' அல்லது 'ஓரளவு பெரிய' பிரச்சனையாகப் பார்க்கின்றனர்

தகவல் இல்லாமை மற்றும் சேவைகளில் சமூக நம்பிக்கை இல்லாமை ஆகியவை இனவாதம் குறித்துக் குறைவாக புகாரளிக்கப்படுவதைக் குறிக்கும்.



## நாம் யாரிடம் பேசினோம்

முதல் மக்கள், பல்கலாச்சார மற்றும் பல்சமூகங்களைச் சேர்ந்த **670க்கும் மேற்பட்ட விக்டோரியர்கள் கூறுவதைச் செவிமடுத்தோம்.**
இவர்களில் சமூகத் தலைவர்கள், நிபுணர்கள் மற்றும் முன்னரங்கப் பணியாளர்கள் அடங்குவர்.

## விக்டோரியாவில் இனவாதம் குறித்துப் புகாரளித்தல்



இனவாதத்தை எவரும் சகித்துக் கொள்ளக் கூடாது.விக்டோரியாவில் இனவாதம் அல்லது பாகுபாடுகளை நீங்கள் எதிர்கொண்டால் அல்லது யாரேனும் எதிர்கொள்வதைக் கண்டால், அது குறித்துப் புகாரளிக்கலாம்.

### விக்டோரியா சம வாய்ப்பு மற்றும் மனித உரிமைகள் ஆணையம்

வார நாட்களில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை 1300 292 153 எனும் எண்ணை அழைக்கவும். உங்களுக்கு இலவச மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், 1300 152 494 என்ற எண்ணிற்கு அழைக்கவும்.

மின்னஞ்சல் **enquiries@veohrc.vic.gov.au**

இணையவழியில் **முறைசாராப் புகார் ஒன்றைச் செய்ய** <https://www.humanrights.vic.gov.au/get-help/community-reporting-tool/>.

**தேசிய ரிலே சேவையைத் தொடர்புகொள்ளுங்கள்** <https://www.humanrights.vic.gov.au/get-help/contact-us/>.

### விக்டோரியா காவல்துறை

அவசரநிலைகளுக்கு, நடந்துகொண்டிருக்கும் குற்றத்தைப் புகாரளிக்க அல்லது உடனடியாக காவல்துறை வருகைக்காக, டிரிபிள் ஜீரோவை (000) அழைக்கவும்.

அவசரநிலை அல்லாதவற்றுக்கு, 131 444 என்ற எண்ணில் காவல்துறை உதவி எண்ணை அழைக்கவும் அல்லது இலவச மொழிபெயர்த்துரைப்பாளருக்காக 131 450 ஐ அழைக்கவும்.

உங்கள் உள்ளூர் காவல் நிலையத்திலோ அல்லது **இணையவழியிலோ** புகார் அளிக்கலாம் <https://www.police.vic.gov.au/police-assistance-line-and-online-reporting>

1800 333 000 என்ற எண்ணில் அல்லது <www.crimestoppers.com.au> இல் Crime Stoppers க்கு நீங்கள் பெயரடையாளம் குறிப்பிடாமல் புகாரளிக்கலாம்

**மேலும் ஆதரவு மற்றும் புகாரளித்தல் விருப்பத்தேர்வுகளுக்கு,** தயவுசெய்து **விக்டோரியாவின் இனவாத எதிர்ப்பு உத்தியைப்** பார்வையிடவும் <https://vic.gov.au/victorias-anti-racism-strategy>

## மேலும் தகவல்கள்

**இணையத்தில்** பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட முழு உத்தி அல்லது இந்தச் சுருக்கத்தை நீங்கள் படிக்கலாம் <https://vic.gov.au/victorias-anti-racism-strategy>.
நீங்கள் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவையைத் தொடர்புகொள்ள (TIS) 131 450 ஐ அழைக்கலாம் மேலும் மேலும் தகவலுக்கு முதல்வர் மற்றும் அமைச்சரவைத் துறை (Department of Premier and Cabinet) 03 9651 5111 ஐ அழைக்கலாம் அல்லது **முதல்வர் மற்றும் அமைச்சரவைத் துறை** மின்னஞ்சல் அனுப்பலாம். <antiracism.strategy@dpc.vic.gov.au>

அங்கீகரித்து மற்றும் வெளியிட்டது: விக்டோரிய அரசாங்கம், 1 ட்ரெஷரி பிளேஸ், மெல்போர்ன்.

© State of Victoria, Australia, Department of Premier and Cabinet, November 2024.

ISBN 978-1-923294-29-5 (online/PDF/Word) or (print)

கிடைக்குமிடம் **விக்டோரியாவின் இனவாத எதிர்ப்பு உத்தி 2024-2029** <https://vic.gov.au/victorias-anti-racism-strategy>

அச்சுப் பதிப்பிக்கப்பட்டது: [insert printing company name, suburb]